©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 2.40 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 41] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 20, 2010
ஐப்பசி 3, திருவள்ளுவர் ஆண்டு – 2041

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை**

**வரைவு அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 103, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (எம்–2)த் துறை, நாள்: 15 ஜூன் 2010.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 19 செப்டம்பர் 2007 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம்–III பிரிவு 1(a)–ன் 160 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் எஸ்.ஆர்.ஓ. A–42/2007 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

2. இந்த வரைவுத் திருத்தம், *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து 45 நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் இருப்பின் அதனை "சென்னை–600 005, சேப்பாக்கத்திலுள்ள தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மூலமாக தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9" என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், 22 ஆம் எண் படிவத்தின் 11ஆம் பகுதியில் உள்ள (i) மற்றும் (ii) துணைப் பகுதிகளில் "திங்களொன்றுக்கு ரூ. 1,600/–க்கும் குறைவாக" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "திங்களொன்றுக்கு ரூ. 10,000/–க்கும் மிகாமல்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகர ராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்.*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 105, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (எம்–2)த் துறை, நாள்: 16 ஜூன் 2010.]*

**1948** ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **63/1948**) **112** ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு **1950** ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **115** ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது :—

## திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில், **2**A விதியுடன் இணைக்கப்பட்டுள்ள விவர அட்டவணையில், **(1)** நெடும்பத்தியில் உள்ள **6**ஆம் தொடர் எண்ணுக்குப் பின்னர், **(2)** முதல் **(5)** வரையிலான நெடும்பத்திகளில் உள்ள தொடர்புடைய பதிவுகளுக்குப் பதிலாக முறையே, கீழ்க்காணும் தொடர் எண்களும், பதிவுகளும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

| | | | |
|---|---|---|---|
| **7.** விதி **61**A பாதுகாப்பு பட்டைகளை சோதனை செய்தல் மற்றும் ஆய்வு செய்தல் | இயந்திரப் பொறியியலில் அல்லது மின் பொறியியலில் அல்லது அதற்குச் சமமானவற்றில் இளநிலைப் பட்டம் | பாகாப்பு பட்டைகளின் சோதனை, ஆய்வு, பார்வையிடல் ஆகியவற்றில் குறைந்த அளவாக ஏழு ஆண்டுகள் அனுபவம் மற்றும் தொழிலக பாதுகாப்புப் பட்டைகளின் தொடர்புடைய தரங்கள், பயன்பாடு மற்றும் அவற்றின் குறிப்பீடுகளில் பழக்கம் உடையவராக இருக்க வேண்டும். | அளவீடு செய்வதற்கான கருவிகள் மற்றும் பெரிதாக்குவதற்கான சாதனங்கள் |
| **8.** விதி **61**B மூடுவெப்ப உலையடுப்பு மற்றும் ஈரம் உலர்த்தும் கருவிகளை ஆய்வு செய்தல் மற்றும் சோதனை செய்தல் | இயந்திரப் பொறியியலில் அல்லது மின் பொறியியலில் அல்லது அதற்குச் சமமானவற்றில் இளநிலைப் பட்டம் | (i) மூடு வெப்ப உலையடுப்பு மற்றும் ஈரம் உலர்த்தும் கருவிகளின் வடிவமைப்பு அல்லது பராமரிப்பு அல்லது இயக்கம் அல்லது சோதனை மற்றும் ஆய்வில் குறைந்த அளவாக ஏழு ஆண்டுகள் அனுபவம்.<br>(ii) நடப்பிலுள்ள நடவடிக்கைகளின் தொடர்புடைய குறியீடுகள் மற்றும் சோதனை நடைமுறைகள் பற்றி அறிந்திருத்தல்<br>(iii) மூடு வெப்ப உலையடுப்புகள் மற்றும் ஈரம் உலர்த்தும் கருவிகள் தொடர்பாக சட்டப்படி செய்ய வேண்டியவற்றில் பழக்கம் உடையவராக இருக்க வேண்டும்.<br>(iv) மூடு வெப்ப உலையடுப்புகள் மற்றும் ஈரம் உலர்த்தும் கருவிகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக, பாதுகாப்புச் சாதனங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடு ஆகியவற்றில் பழக்கம் உடையவராக இருக்க வேண்டும்.<br>(v) மூடு வெப்ப உலையடுப்புகள் மற்றும் ஈரம் உலர்த்தும் கருவிகளில் ஏற்படுகிற குறைபாடுகள் மற்றும் அவை பழுதடைவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான திறன் பெற்றவராக இருக்க வேண்டும்.<br>(vi) மூடு வெப்ப உலையடுப்புகள் மற்றும் ஈரம் உலர்த்தும் கருவிகளின் பாதுகாப்பு குறித்து நம்பகமான முடிவு எடுப்பதற்கான திறன். | (i) சோதனைகளை செய்வதற்காகவும், பாதுகாப்பு குறித்து சான்றளிப்பதற்காகவும் உரியவாறு கட்டமைக்கப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட அளவீட்டு கருவிகள், சாதனங்கள் மற்றும் கருவிகள்<br>(ii) தீங்கற்ற சோதனையை செய்வதற்கான வசதிகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | விதி 61 P–<br>(i) துணை விதி (16) சூடாக்கும் கருவியின் மின் இயக்க கம்பிச்சுருளை சோதனை செய்தல் | இயந்திரப் பொறியியலில் அல்லது மின் பொறியியலில் அல்லது அதற்குச் சமமானவற்றில் இளநிலைப் பட்டம் ஏழாண்டுகள் அனுபவம். | வெப்பஞ் சார்ந்த நீர்மத்தைச் சூடாக்கும் கருவியின் வடிவமைப்பில் அல்லது இயக்கத்தில் அல்லது பராமரிப்பில் அல்லது சோதனை மற்றும் ஆய்வில் குறைந்த அளவாக | அழுத்தச் சோதனை செய்வதற்கான வசதிகள். |
| | (ii) துணை விதி (18) வெப்பத்தைச் சார்ந்த நீர்மத்தைச் சோதனை செய்தல் | வேதியியலில் முதுநிலைப் பட்டம் அல்லது வேதியியல் பொறியியலில் இளநிலைப் பட்டம் | வெப்பஞ் சார்ந்த நீர்மங்களை சோதனை செய்வதில் குறைந்த அளவாக ஏழாண்டுகள் அனுபவம் | வெப்பஞ் சார்ந்த நீர்மத்தின் அமிலத் தன்மை, மிதக்கிற பொருள், சாம்பல் பொருட்கள் குழைம நிலை மற்றும் ஒளிரும் நிலை ஆகியவற்றைச் சோதனை செய்வதற்கான ஆய்வுக்கூட வசதிகள். |
| 10 | விதி 95, விவர அட்டவணை XVI, பாகம் II பத்தி 7 சாதனங்களையும் பாதுகாப்புக் கருவிகளையும் ஆய்வு செய்தல் | வேதியியல் பொறியியலில் வேதியியல் தொழில் நுட்பவியலில் அல்லது சாதனப் பொறியியலில் அல்லது சாதனத் தொழில் நுட்பவியலில் அல்லது இயந்திரப் பொறியியலில் இளநிலைப் பட்டம் | (i) கீழ்க்கண்டவற்றில் குறைந்த அளவாக ஏழாண்டுகள் அனுபவம்.<br>(a)வேதியியல் செய்முறை தொழிற்சாலையில் இயக்கம் அல்லது பராமரிப்பு அல்லது<br>(b) செய்முறை சாதனங்கள் மற்றும் பாதுகாப்புக் கருவிகளின் சோதனை, ஆய்வு மற்றும் பார்வையிடல்<br>(ii) நடப்பிலுள்ள தொடர்புடைய நடவடிக்கைகளின் குறியீடுகள் மற்றும் சோதனை நடமுறைகளில் முற்றிலும் பழக்கம் உடையவராக இருப்பதுடன், செய்முறை சாதனங்கள் மற்றும் பாதுகாப்புக் கருவிகளின் நம்பகத்தன்மை மற்றும் முறையான செயல்பாடு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் ஒரு நம்பகமான முடிவு எடுக்கும் திறன் பெற்றவராக இருக்க வேண்டும். | செய்முறைச் சாதனங்கள் மற்றும் பாதுகாப்புக் கருவிகளின் சோதனை நடவடிக்கை மேற்கொள்வதற்காக, உரியவாறு கட்டமைக்கப்பட்டு சான்றளிக்கப்பட்ட அளவீட்டுக் கருவிகள், சாதனங்கள், கருவிகள் மற்றும் பொருத்தமான ஏனைய வசதிகள் |
| 11 | விதி 95, விவர அட்டவணை XVI, பாகம் II பத்தி 15 தளவாடங்கள் மற்றும் சாதனங்களின் சோதனை ஆய்வு மற்றும் பழுதுபார்ப்பு | வேதியியல் பொறியியலில் அல்லது வேதியியல் தொழில் நுட்பவியலில் அல்லது சாதனப் பொறியியலில் அல்லது சாதனத் தொழில் நுட்பவியலில் அல்லது இயந்திரப் பொறியியலில் இளநிலைப் பட்டம் | (i) கீழ்க்கண்டவற்றில் குறைந்த அளவாக ஏழாண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்<br>(a) ஒரு வேதியியல் தொழிற்சாலையில் செய்முறை தளவாடத்தின் இயக்கம் அல்லது பராமரிப்பு அல்லது<br>(b) வேதியியல் செய்முறை தொழிற்சாலை ஒன்றில் தளவாடம், சாதனம் மற்றும் இயந்திரம் ஆகியவற்றின் சோதனை ஆய்வு மற்றும் பார்வையிடல்<br>(ii) அவர், (a) சம்பந்தப்பட்ட அபாயங்களின் செய்முறை பற்றி முற்றிலும் பழக்கம் உடையவராக இருக்கவேண்டும். | பருமனை அளவீடு செய்வதற்கான அல்ட்ரா சானிக் சாதனம், பழுது கண்டறியும் சாதனம் நீராற்றலால் இயங்கும் விசை இயந்திரம் நச்சு மற்றும் எரியத்தக்க வாயுவைக் கண்டறிகிற கையடக்கச் சாதனங்கள் (பலவகையான வாயுவைக் கண்டறிகிற சாதனம்) போன்ற தீங்கற்ற சோதனை செய்யும் சாதனங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (b) வேதியியல் செய்முறை தொழிற்சாலையில் உள்ள தளவாடம், சாதனம் இயந்திரம் ஆகியவற்றில் ஏற்படுகிற குறைபாடுகள் மற்றும் அவற்றில் பழுது ஏற்படுவதற்கான பிற காரணங்கள் ஆகியவற்றைக் கண்டறியும் திறன் பெற்றவராக இருக்க வேண்டும்.<br>(c) தளவாடம், சாதனம் மற்றும் இயந்திரத்தின் பாதுகாப்பு மற்றும் கூறுபடா நிலை தொடர்பாக நம்பகமான முடிவு எடுப்பதற்கான திறன் பெற்றிருக்க வேண்டும். | |
| 12 | விதி 95, விவர அட்டவணை XVI, பாகம் II, பத்தி 18 அடைக்கப்பட்ட இடத்தில் நுழைதல் அல்லது பணிபுரிதல் | வேதியியலில் முதுநிலைப் பட்டப்படிப்பு அல்லது வேதியியல் பொறியியலில் இளநிலைப் பட்டப் படிப்பு | (i) சுற்றுச்சூழல் சார்ந்த மாதிரிகளை சேகரித்து ஆய்வு செய்தல், கண்காணிப்புச் சாதனங்களைக் கட்டுதல் ஆகியவற்றில் குறைந்தளவாக ஏழாண்டுகள் அனுபவம்.<br>(ii) (a) அவர், அபாயகரமான வேதியியல் பொருட்கள் மற்றும் அவற்றின் அனுமதிக்கத் தக்க வரையறை பண்புக் கூறுகள் ஆகியவற்றில் பழக்கம் உடையவராக இருக்க வேண்டும்.<br>(b) அவர், மாதிரி எடுத்தல் குறித்த நடப்பு உத்திகள் மற்றும் கலப்படப் பொருட்களை பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றில் பழக்கம் உடையவராக இருக்க வேண்டும் மற்றும்.<br>(c) அவர் அடைக்கப்பட்ட இடத்தில் நுழைந்து வெப்பமான பணி அல்லது பிற பராமரிப்புப் பணியை மேற்கொள்வது தொடர்பாக பாதுகாப்பு குறித்த நம்பகமான முடிவு எடுப்பதற்கான திறன் பெற்றவராக இருக்கவேண்டும். | அடைக்கப்பட்ட இடத்தில் பயன்படுத்தத் தக்க இரசாயன வாயுக்கள் அல்லது புகைகளுக்கு பொருந்தத்தக்கவாறான கையடக்கமான பலவகையான வாயுக்களை கண்டறிகின்ற சாதனங்கள், ஆக்ஸிஜன் அளவைக் காட்டுகின்ற கருவி. |
| 13 | விதி 92, விவர அட்டவணை XVI பாகம் V, பத்தி 5 மீண்டும் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கிலிருந்து தயாரிக்கப்பட்ட தளவாடம் மற்றும் சாதனத்தை சோதனையிடுதல் | பிளாஸ்டிக் தொழில் நுட்பத்தில் அல்லது வேதியியல் பொறியியலில் அல்லது தொழில் நுட்பத்தில் இயந்திரப் பொறியியலில் அல்லது மின் பொறியியலில் இளங்கலைப் பட்டப்படிப்பு | (i) பின்வருவனவற்றில் குறைந்தளவாக ஏழாண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.<br>(a) இரசாயன தொழிற்சாலையில் செயல்முறை தளவாடம் இயக்குவதில் அல்லது பராமரிப்பதில் (அல்லது)<br>(b)இரசாயன தொழிற்சாலையில், மீண்டும் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கிலிருந்து தயாரிக்கப்பட்ட தளவாடத்தையும் சாதனத்தையும் பரிசோதனை செய்வதில் மற்றும் ஆய்வு செய்வதில்<br>(ii) (a) மீண்டும் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கிலிருந்து தயாரிக்கப்பட்ட தளவாடம் மற்றும் சாதனம் தொடர்பாக, இந்திய தரங்கள் அல்லது ஏனைய யாதொரு தேசீய தரங்கள் குறித்து அவருக்கு முழுமையாக தெரிந்திருக்க வேண்டும். | அல்ட்ரா சானிக் பருமனை அளவிடுகின்ற சாதனம், பழுது கண்டறியும் சாதனம் மற்றும் நீராற்றலால் இயக்கப்படுகின்ற விசை இயந்திரம் போன்ற தீங்கற்றவற்றை சோதனையிடுகின்ற சாதனம். |

(b)மீண்டும் வலுவூட்டப்பட்ட
பிளாஸ்டிக்கின் இரசாயன இணக்கதன்மை
பற்றி முற்றிலும் பழக்கம் உடையவராக
அவர் இருக்கவேண்டும்.

(c) மீண்டும் வலுவூட்டப்பட்ட
பிளாஸ்டிக்கிலிருந்து தயாரிக்கப்பட்ட
தளவாடம் மற்றும் சாதனம் பழுது
ஏற்படுவதற்கு வழிவகுக்கின்ற குறைபாடுகள்
மற்றும் ஏனைய காரணங்களை
கண்டறிவதற்கான திறன் பெற்றவராக
அவர் இருக்க வேண்டும்.

(d) மீண்டும் வலுவூட்டப்பட்ட
பிளாஸ்டிக்கிலிருந்து தயாரிக்கப்பட்ட
தளவாடம் மற்றம் சாதனத்தின் பாதுகாப்பு
மற்றும் கூறுபடா நிலை தொடர்பாக
நம்பகமான முடிவு எடுப்பதற்கான திறன்
பெற்றவராக அவர் இருக்கவேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்.*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.